**கவனிக்க**.- *2010.04.23 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I: தொகுதி III மற்றும் பகுதி II ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1652 - 2010 අප්‍රේල් මස 30 වැනි සිකුරාදා - 2010.04.30

*1652 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | - |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | - |
| விலைக் கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 870 |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | - |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை - நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கான விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2010, மே மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, ஏப்பிறல் மாதம் 23 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன**,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ

திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

2009, திசெம்பர் 16 ஆந் திகதியன்று நடைபெற்ற தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ இன் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் சிறப்பாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டது:-

"(கடன்பெறுநரான) 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் உரியமுறையில் கூட்டிணைக்கப்பட்டதும், மாவனல்லையில் அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ளதுமான ரண்சிறி கொன்பெக்ஷனரி (பிறைவேட்) லிமிட்டெட் தாபனம், முன்னர் தேசிய அபிவிருத்தி வங்கி லிமிட்டெட் அபிவிருத்தி (வங்கி) தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ இன் சார்பில் பிரசித்த நொத்தாரிசு (திருவாட்டி) ஆர். எம். எம். என். கே. ரத்னாயக்க அவர்களினால் இரண்டும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2002.02.15 ஆந் திகதிய 514 ஆம் இலக்க மற்றும் 2004.08.19 ஆந் திகதிய 1025 ஆம் இலக்க முறியின் மீதும், பிரசித்த நொத்தாரிசு (திருவாட்டி) சீ. என். சமரவிக்ரம அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007.03.29 ஆந் திகதிய 703 ஆம் இலக்க முறியின் மீதும் வருமதியான கொடுப்பனவைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளதாதலாலும்,

முகாமைப் பணிப்பாளரும், கீழே விபரிக்கப்பட்ட ஆதனத்தினதும் வளவுகளினதும் இறையிலிச் சொந்தக்காரரும், அதாவது கல்ஹேன கமகே ரத்னசிறி என்பவர், தமது இறையிலி உரிமை, உரித்து, அக்கறை என்பவற்றைச் சொல்லப்பட்ட முறிகளின் கீழ் வங்கிக்கு ஈடுவைத்துள்ளாராதலாலும்,

அத்துடன் 2009, நவெம்பர் 30 ஆந் திகதியன்றுள்ளவாறாகப் ஒரு கோடியே பதின்மூன்று இலட்சத்து ஐம்பத்தொன்பதாயிரத்து நூற்று தொண்ணூற்று மூன்று ரூபா எண்பத்திரண்டு சதம் (ரூ. 1,13,59,193.82) கொண்ட தொகை சொல்லப்பட்ட முறிகள் மீது வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியும் வந்துள்ளதாதலாலும்,

வங்கியின் பணிப்பாளர் சபையானது, 1995 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான (பிரதான சட்டமான) 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் செயற்பட்டு, சொல்லப்பட்ட பணத்தொகையான ஒரு கோடியே பதின்மூன்று இலட்சத்து ஐம்பத்தொன்பதாயிரத்து நூற்று தொண்ணூற்று மூன்று ரூபா எண்பத்திரண்டு சதம் (ரூ. 1,13,59,193.82) கொண்ட தொகையையும் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தையும், சொல்லப்பட்ட 514 ஆம் இலக்க முறியின் மீது வருமதியான பிரதான தொகையான எண்பத்து மூவாயிரத்து நாநூறு ரூபா (ரூ. 83,400.00) தொகை மீது, எல்லாம் 2009, திசெம்பர் 1 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை, ஆண்டொன்றுக்குப் பதினெட்டு வீதப்படி (18%) வருமதியான வட்டியையும், சொல்லப்பட்ட 1025 ஆம் இலக்க முறியின் மீது வருமதியான பிரதான தொகையான ஏழு இலட்சத்து தொண்ணூற்று எட்டாயிரத்து அறுநூற்று ஐம்பத்தொரு ரூபா எண்பத்திரண்டு சதம் (ரூ. 7,98,651.82) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்குப் பதினாறு தசம் ஐந்து வீதப்படி (16.5%) வருமதியான வட்டியையும், சொல்லப்பட்ட 703 ஆம் இலக்க முறி மீது வருமதியான பிரதான தொகையான அறுபத்து நான்கு இலட்சத்து தொண்ணூற்று ஏழாயிரத்து அறுநூற்று முப்பத்தேழு ரூபா எண்பத்து நான்கு சதம் (ரூ. 64,97,637.84) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு இருபத்தைந்து தசம் ஏழு ஐந்து வீதப்படி (25.75%) வருமதியான வட்டியையும், அதன்பின்னர் பெறப்பட்ட கொடுப்பனவுகள் (எவையேனுமிருப்பின்) அவற்றைக் கழித்து, பிரதான சட்டத்தின் 4 ஆம் பிரிவின் நியதிகளின்படி அடையப்பட்ட விளம்பரச் செலவுகள், விற்பனைச் செலவுகள், மற்றும் ஏனைய இறுப்பனவுகள் என்பவற்றுடன் சேர்த்து அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட முறிகள் மூலம் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழே விபரிக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும், அவ்வாதனத்துக்கும் வளவுகளுக்குமான இறையிலி மற்றும் ஏனைய உரிமை, உரித்து அக்கறை என்பனவுட்பட, உத்தரவுபெற்ற ஏலதாரரான திரு. பீ. கே. ஈ. சேனாபதி அவர்களினால் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

### மேலே குறிப்பீடு செய்யப்பட்ட ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

1. சப்பிரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டத்திலுள்ள கல்பொடக் கோறளையின் எகொடபொத்த தனிப்பேரு பத்துவில் படிதொறவில் அமைந்துள்ளதும், குறும்பௌல்லேஹேன எனவழைக்கப்படும் காணியினதாய் உ. நி., எம். பி. ரணதுங்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1985.05.20 ஆந் திகதிய 2629 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 14 என அடையாளம் இடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; அதன் எல்லைகள் பின்வருமாறு - வடக்கில் : சொல்லப்பட்ட வரைபடத்தின் 13 ஆம் காணித்துண்டமாக அடையாளமிடப்பட்ட பொது வீதி; கிழக்கில் : அரநாயக்க-மானவல்லை வீதி; தெற்கில் : சொல்லப்பட்ட வரைபடத்தின் காணித்துண்டம் 15 மற்றும் ; மேற்கில் : சொல்லப்பட்ட வரைபடத்தின் காணித்துண்டம் 16; பரப்பளவில் இது அதன் மீது இப்போதுள்ள அல்லது இதன்பின்னர் இருக்கக்கூடிய கட்டிடங்களுடனும் ஏனைய பொருட்களுடனும், காணியுடனும், வளவுகளுடனும் நிரந்தரமாகப் பொருத்தப்பட்ட/ இணைக்கப்பட்ட ஏனைய பொருட்களுடனும் சேர்த்து இருபது பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 20பே.) கொண்டுள்ளதுடன், கேகாலை காணிப் பதிவகத்தில் தொகுதி/ பக்கம் சீ 550/ 264 இல் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

2. மேற்கூறப்பட்ட படிதொறவில் அமைந்துள்ளதும், குறும்பௌல்லே ஹேன எனவழைக்கப்படும் காணியினதாய் மேற்கூறப்பட்ட 2629 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 15 என அடையாளம் இடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; அதன் எல்லைகள் பின்வருமாறு - வடக்கில் : சொல்லப்பட்ட வரைபடத்தின் காணித்துண்டம் 14 ; கிழக்கில் : அரநாயக்க-மானவல்லை வீதி; தெற்கில் : சொல்லப்பட்ட வரைபடத்தின் காணித்துண்டம் 34 மற்றும் ; மேற்கில் : சொல்லப்பட்ட வரைபடத்தின் காணித்துண்டம் 16 மற்றும் 33 ; பரப்பளவில் இது. அதன் மீது இப்போதுள்ள அல்லது இதன்பின்னர் இருக்கக்கூடிய கட்டிடங்களுடனும் ஏனைய பொருட்களுடனும், காணியுடனும், வளவுகளுடனும் நிரந்தரமாகப் பொருத்தப்பட்ட/ இணைக்கப்பட்ட ஏனைய பொருட்களுடனும் சேர்த்து இருபது பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 20பே.) கொண்டுள்ளதுடன், கேகாலை காணிப் பதிவகத்தில் தொகுதி/ பக்கம் சீ 550/ 265 இல் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

3. மேற்கூறப்பட்ட படிதொறவில் அமைந்துள்ளதும், குறும்பெனல்லே ஹேன எனவழைக்கப்படும் காணியினதாய் மேற்கூறப்பட்ட 2629 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 34 என அடையாளம் இடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்ட துமான அக்காணித்துண்டு அடங்கலும்; அதன் எல்லைகள் பின்வருமாறு - வடக்கில் : சொல்லப்பட்ட வரைபடத்தின் காணித்துண்டம் 15 ; கிழக்கில் : அரநாயக்க-மானவல்லை வீதி; தெற்கில் : சொல்லப்பட்ட வரைபடத்தின் காணித்துண்டம் 35 மற்றும் ; மேற்கில் : சொல்லப்பட்ட வரைபடத்தின் காணித்துண்டம் 33 ; பரப்பளவில் இது. அதன் மீது இப்போதுள்ள அல்லது இதன்பின்னர் இருக்கக்கூடிய கட்டிடங்களுடனும் ஏனைய பொருட்களுடனும், காணியுடனும், வளவுகளுடனும் நிரந்தரமாகப் பொருத்தப்பட்ட/இணைக்கப்பட்ட ஏனைய பொருட்களுடனும் சேர்த்து இருபது பேர்ச்சஸ் களை (0ஏ. 0றூ. 20பே.) கொண்டுள்ளதுடன், கேகாலை காணிப் பதிவகத்தில் தொகுதி/பக்கம் சீ 550/266 இல் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

பணிப்பாளர்/பொது முகாமையாளர்,
தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ.

4-606